අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

22 T I,II

අධ්‍යාපන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) උපකාරක තක්සෙරුව, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) உதவி மதிப்பீடு, 2026
General Certificate of Education (Ord. Level) Supportive Assessment, 2026

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය	I, II
தமிழ்மொழியும் இலக்கியமும்	**I, II**
Tamil Language Literature	**I, II**

පැය තුනකි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීමේ කාලය - මිනිත්තු 10යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

தமிழ்மொழியும் இலக்கியமும் I

அறிவுறுத்தல்கள் :

- **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக. வினாத்தாள் **I** இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்.
- **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

- **தடித்த எழுத்தில்** உள்ள சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

1. ‘மிக்காரைச் சேர்தல் மிகமான முன் இனிதே....’ - இங்கு **மிக்கார்** என்பது
(1) அறிவிலார் (2) அறிவுடையார் (3) இனியார் (4) வள்ளல்

2. ‘கிம்புரியின் கொம்பெடுத்து வெம்பு தினையிடிப்போம்....’ - இங்கு **கிம்புரி** என்பது
(1) குரங்கு (2) எருமை (3) களிறு (4) மான்

3. ‘பிரிவின்கண் பீழை தருவதுஒன்று...’ - இங்கு **பீழை** என்பதன் **எதிர்ப்பொருள்**
(1) துன்பம் (2) செல்வம் (3) பிணி (4) இன்பம்

4. ‘வேந்தர் எம் குன்றும் கொண்டார்’ - இங்கு **குன்று** என்பதன் **எதிர்ப்பதம்**
(1) குழி (2) மலை (3) மேடு (4) முரசு

5. ‘உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது’ - இங்கு **கமலம்** என்ற சொல்லுக்குப் **பொருத்தமற்றது**
(1) அம்புயம் (2) பங்கயம் (3) முளரி (4) மல்லிகை

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

6. குருவி, குயில் ஆகியவற்றின் தொனி முறையே
(1) கீச்சிடும், கத்தும் (2) கூவும், பேசும் (3) சொல்லும், கூவும் (4) கீச்சிடும், கூவும்

7. Minerals என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகராக, தமிழில் வழங்கும் கலைச்சொல்
(1) வன்பொருள்கள் (2) கனிப்பொருள்கள் (3) மூலப்பொருள்கள் (4) மென்பொருள்கள்

8. ஏடு, இழை, பனுவல் ஆகிய சொற்கள் குறிக்கும் ஒரு பொருள்
(1) ஆபரணம் (2) தையல் (3) புத்தகம் (4) பத்திரிகை

9. ‘மலை மடியில் கண்வளர்த்தோம்...’ **கண்வளர்தல்** என்ற மரபுத் தொடரால் உணர்த்தப்படுவது
(1) இறத்தல் (2) நித்திரை செய்தல் (3) அறிவுண்டாதல் (4) எதிர்பார்த்தல்

Past Papers Wiki

10. **கள்ளங்கபடம்** என்ற இணைமொழிக்குப் பொருத்தமான பிறிதொரு இணைமொழி
(1) சூதுவாது (2) கூடமாட (3) குற்றம்குறை (4) தட்டுமுட்டு

11. 'இயல்பாகவே கற்றுக் கொள்ளல்' எனும் கருத்தை உணர்த்துவதற்கு மிகப் பொருத்தமான உவமைத்தொடர்
(1) கள்ளூ முட்டி பொங்குவது போல
(2) மீன்குஞ்சு நீந்துவது போல
(3) புகையிலைக் கன்றுக்குப் பாத்தி கட்டுவது போல
(4) பொங்கல் பானையை இறக்குவது போல

12. 'மாண்பு கடவாத மானம்' - இங்கு **மாண்பு** என்பது
(1) பெருமை (2) சிறுமை (3) வெறுமை (4) பொறுமை

13. 'அரவுயர்த்தோனுடன் மறுசூது ஆடி...' இத்தொடரில் இடம் பெற்றுள்ள வேற்றுமை
(1) முதலாம் வேற்றுமை (2) இரண்டாம் வேற்றுமை
(3) மூன்றாம் வேற்றுமை (4) நான்காம் வேற்றுமை

14. 'உய்வர் ஆர் என விரைவின் உருத்து எழுந்து' - இங்கு **உருத்து** என்பது
(1) மகிழ்ச்சி (2) மானம் (3) விரைவு (4) சினம்

15. சீலம், தூபி என்பன எம்மொழிச் சொற்கள்
(1) உருது (2) மராட்டி (3) பாளி (4) அரபு

16. பின்வருவனவற்றுள் **பொருத்தமற்றது**
(1) பாங்கன் - பாங்கி (2) கூனன் - கூனி (3) பொன்னன் - பொன்னி (4) பிரான் - பிரானி

17. பெண்ணும் சுற்றமும் உடன்படாமல் வலிந்து கொள்ளும் மணம்
(1) பாஞ்சன்யம் (2) இராக்கதம் (3) காந்தர்வம் (4) மாராயம்

18. பின்வருவனவற்றுள் கிழக்குப் பிரதேச வழக்குச் சொல்லாக அமைவது
(1) மோள் (2) மடுவம் (3) வெள்ளோடன் (4) எப்பன்

19. 'ஆ.... சரிசரி நெனவீக்கி' - இங்கு **சரிசரி** என்பது
(1) இரட்டைக் கிளவி (2) அடுக்குத்தொடர்
(3) அடுக்கிடுக்குத்தொடர் (4) இணைமொழி

20. 'வறுமையிலும் செம்மை வேண்டும்' என்ற கருத்தை உணர்த்தும் பழமொழி
(1) இரக்கப் போனாலும் சிறக்கப் போ
(2) இட்டுக் கெட்டார் எங்கும் இல்லை
(3) கனிந்த பழம் தானே விழும்
(4) வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **மிகச் சரியான** விடையைத் தெரிவுசெய்க.

21. பின்வருவனவற்றுள் 'டகரம்' வேறுபட்டு ஒலிக்கும் சொல்
(1) கடம் (2) கடகம் (3) கடை (4) கட்டை

22. பின்வருவனவற்றுள் இடைப்போலி
(1) தேயம் (2) ஆயம் (3) மாயம் (4) நியாயம்

23. பின்வருவனவற்றுள் தற்சமம் **அல்லாதது**
(1) குங்குமம் (2) அபாயம் (3) புருடன் (4) திருப்தி

24. பின்வருவனவற்றுள் பருப்பொருள் சார்ந்த நீங்கல் பொருளை உணர்த்தும் வாக்கியம்
(1) பாம்பு புற்றிலிருந்து புறப்பட்டது.
(2) கவலையிலிருந்து அவளால் விடுபடமுடியவில்லை.
(3) நான் தூக்கத்திலிருந்து விழித்தேன்.
(4) என் ஞாபகத்திலிருந்து அவள் நினைவுகளை அகற்றிவிட்டேன்.

25. உரிச்சொல்லை பகுதியாகக் கொண்ட வினைச்சொல்

(1) ஆண்டான் (2) மாண்டான் (3) போன்றான் (4) பயந்தான்

26. பின்வருவனவற்றுள் தோன்றல் விகாரம் **அல்லாதது**

(1) பலாவை (2) நிலாவை (3) பூனையை (4) நாயை

27. பின்வருவனவற்றுள் **வழாநிலை** வாக்கியம்

(1) கண்காட்சி நாளை நடைபெறுகின்றது.
(2) மாடோ, மனிதனோ அங்கே தோன்றும் உரு?
(3) மூர்க்கனும் முதலையும் கொண்டது விடாது.
(4) பஞ்ச பாண்டவர் ஐவரும் வந்தனரா?

28. அகராதி ஒழுங்கில் அமைந்த சொற்றொகுதி

(1) சனம், சினம், மனம், மீனம் (2) கடம், தடம், வடம், படம்
(3) கலை, சிலை, மலை, தலை (4) தயிர், கயிறு, பயம், மயில்,

- **பொருத்தமற்ற** உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவு செய்க.

29. (1) ஆக்கப்பெயர் : விருந்தாளி, புத்திசாலி, கடன்காரன்
(2) கூட்டுப்பெயர் : நீர்வீழ்ச்சி, மின்சாரம், கூட்டுறவு
(3) தொழிற்பெயர் : ஓடல், காணல், வண்டல்
(4) வினையாலணையும் பெயர் : போனவன், கற்றவர், வந்தவை

30. (1) பெயரடை : அழகான, வேகமான, புத்தியுள்ள
(2) வினையடை : அவதானமாக, ஆரவாரமாக, கவனமாய்
(3) தனிவினை : நடந்தான், வந்தான், பாடினான்,
(4) கூட்டுவினை : காத்திருந்தான், முன்னேறினான், நின்றான்

- புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு **மிகப் பொருத்தமான** சொல்லைத் தெரிவு செய்க

31. தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் சிலர் தமது ..... இழந்தனர்.

(1) முற்பணத்தை (2) சந்தாப்பணத்தை
(3) கட்டுப்பணத்தை (4) நிலுவைப்பணத்தை

32. களப்பயணம் சென்று வந்த ஆசிரியர்கள் அதிபரிடம் ..... சமர்ப்பித்தனர்.

(1) முறைப்பாடு (2) கருத்துரை (3) விதப்புரை (4) அறிக்கை

33. மாணவர்கள் புராதனப் பொருட்களைப் பார்வையிடுவதற்காக ..... சென்றனர்.

(1) பர்ணசாலை (2) நூதனசாலை (3) வாசிகசாலை (4) களஞ்சியசாலை

34. இலஞ்சம் பெற்ற அதிகாரியை இலஞ்ச ஊழல் ..... கைது செய்தது.

(1) செயற்குழு (2) கண்காணிப்புக்குழு
(3) தூதுக்குழு (4) ஆணைக்குழு

35. மாணவர்கள் மத்தியில் மூத்தோரை மதித்தல் தொடர்பாக ..... ஏற்படுத்தப்படல் வேண்டும்.

(1) கோரிக்கை (2) விழிப்புணர்வு (3) சட்டம் (4) அறிவித்தல்

36. சிரமதானப் பணியில் பாடசாலை மாணவர்களுடன் பழைய மாணவர் சங்கமும் இணைந்து .....

(1) கொண்டது (2) கொண்டனர் (3) கொண்டார்கள் (4) கொண்டன

- கீழே தரப்பட்டுள்ள கவிதையை அடிப்படையாகக் கொண்டு **37** தொடக்கம் **39** வரையான வினாக்களுக்கு விடை தருக

தாயென்று சொல்லி வாயால்
தமிழ் சொல் உரைத்தால் போதும்
தேயும் நிலாவும் கூட
தெளிந்து ஒளி வீசும் கண்டாய் !

மாயிரு ஞாலம் எல்லாம்
மணக்கும் மலரே தாய்தான்
பாயும் புனலே தாய்தான்
பரவும் ஒளியே தாய்தான் !

37. இக்கவிதையில் விபரிக்கப்படுவது

(1) நிலவின் பெருமை (2) தமிழின் பெருமை
(3) மலரின் பெருமை (4) தாயின் பெருமை

38. புனல் என்பதன் கருத்து

(1) நீர் (2) எண்ணெய் (3) கலை (4) மலர்

39. "மாயிரு ஞாலம்" என்பதால் உணர்த்தப்படுவது

(1) போலியான உலகம் (2) இருண்ட உலகம்
(3) மிகப்பெரிய உலகம் (4) ஒளிவீசும் உலகம்

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபடுத்தினால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க

அ. இவ்வாறான நற்பிரஜைகளை உருவாக்குவதில் பாடசாலைகள் முக்கிய பங்குவகிக்கின்றன.

ஆ. அவ்வாறன்றி நல்லொழுக்கங்களையும் கற்று வாழ்வில் உயர்ந்த நிலையை அடைய முயல வேண்டும்.

இ. அது நற்பண்புகளையும் அறிவையும் கற்றுக் கொடுத்து சிறந்த பிரஜைகளை உருவாக்குகிறது.

ஈ. தற்காலத்தில் சிலர் புத்தக அறிவை மாத்திரம் பெற்றுக்கொள்வதில் முனைப்போடு செயற்படுகின்றனர்.

உ. கல்வி என்பது ஒரு மனிதனின் வாழ்க்கைக்கு முக்கியமான அடித்தளமாகும்.

(1) ஈ, ஆ, உ, இ, அ (2) உ, இ, அ, ஈ. ஆ
(3) உ, அ, ஆ, ஈ, இ (4) ஈ, உ, இ, அ, ஆ

(40x1=40 புள்ளிகள்

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

22 T I,II

අධ්‍යාපන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) උපකාරක තක්සෙරුව, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) உதவி மதிப்பீடு, 2026
General Certificate of Education (Ord. Level) Supportive Assessment, 2026

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය	I, II
தமிழ்மொழியும் இலக்கியமும்	**I, II**
Tamil Language Literature	**I, II**

தமிழ்மொழியும் இலக்கியமும் II

அறிவுறுத்தல்கள் :

- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

1. சுருக்கமான விடை எழுதுக.

(i) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.

'புலன ழிந்தொரு புத்துயி ரெய்துவேன்'

(ii) 'சிறை இலது ஆய்க்கரை துன்னிற்று என்னவும் வந்தது, தோணியே'

இந்த வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகளைக் குறிப்பிடுக.

(iii) பின்வரும் பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்கில் தருக

'நம்மட உம்மாவ வூட்டுக்க ஒளிச்சு வச்சிருக்கலாம்'

(iv) பின்வரும் வாக்கியத்தை பொருத்தமான நிறுத்தக்குறிகளை இட்டு மீண்டும் எழுதுக.

என்னடா அப்பிடிப் பார்க்கிறாய் என்றாள்

(v) - பாரதியார் எட்டயபுரத்தில் பிறந்தார்.

- பாரதியார் குழந்தைப் பாடல்களைப் பாடினார்

மேற்படி இரு வாக்கியங்களையும் ஒரே வாக்கியமாக்கி எழுதுக.

(vi) 'பார்' என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்க வகையில் ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

(vii) பின்வரும் சொற்களில் காணப்படும் எழுத்துப் பிழைகளை இனங்கண்டு, திருத்தி சரியான முறையில் எழுதுக

கைநூல், நாகரீகம்

(viii) புனைகதை, இராப்பகல் என்பன எவ்வகைத் தொகைகள் எனக்குறிப்பிடுக.

(ix) இயல், இசை, நாடகம்

ஆகியவற்றின் பொதுப்பெயரைக் குறிப்பிடுக

(x) 'அனைத்து அலுவலகங்களுக்கும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டது'

இந்த வாக்கியத்தில் உள்ள வழுவைச் சுட்டிக்காட்டி, வழுவற்ற வகையில் வாக்கியத்தை திருத்தி எழுதுக.

(10x2=20 புள்ளிகள்)

2. பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவு செய்து, ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான **தலையங்கம்** இடுக.

(i) எமது நாட்டில் நாளுக்கு நாள் வீதி விபத்துகள் அதிகரித்துச் செல்கின்றன. இதனால் பலர் உயிரிழப்பதுடன் இன்னும் பலர் நிரந்தர ஊனமுற்றவர்களாகவும் மாறுகின்றனர். வீதி விபத்துகள் குடும்பங்களின் மகிழ்ச்சியைச் சிதைப்பதுடன், நாட்டின் பொருளாதாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. எனவே வீதி விபத்துகளுக்கான காரணங்கள், அதனால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அவற்றைத் தடுக்கும் வழிமுறைகளையும் உள்ளடக்கியதாக ஒரு **விளக்கக் கட்டுரை**

(ii) இன்றைய நவீன உலகில் மனித வாழ்வைத் தீர்மானிப்பதில் தொழில்நுட்பம் முக்கிய பங்குவகிக்கிறது. தொழில்நுட்ப வளர்ச்சியால் மனித வாழ்வில் பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்ட போதும் பாதிப்புகளும் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. தொழில்நுட்ப வளர்ச்சி மனித வாழ்வில் ஏற்படுத்தும் நன்மை, தீமைகள் குறித்து இரு நண்பர்களுக்கு இடையில் நிகழும் **உரையாடல்.**

(iii) குடும்ப வன்முறைகள் பிள்ளைகளின் மனநலத்தைப் பெரிதும் பாதிப்பதுடன் அவர்களின் கல்வியிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பெரியவர்களின் தவறான செயற்பாடுகள் பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்குகின்றது. போதைக்கு அடிமையாதல், முறையற்ற சமூக ஊடகப்பயன்பாடு, பொருளாதார நெருக்கடி என்பன குடும்ப வன்முறையைத் தூண்டுகின்றன. இவ்வாறான நிலைமைகளிலிருந்து மீட்டெடுப்பதனை வலியுறுத்தும் ஒரு **மேடைப்பேச்சு**.

(iv) வறுமை காரணமாகப் பலரும் படிப்பைப் பாதியில் கைவிட்ட போதும் அருணன் தனது விடாமுயற்சியால் சவால்களை எதிர்கொண்டு படிப்பைத் தொடர்ந்தான். குப்பி விளக்கு வெளிச்சத்தில் அவன் படித்துப் பெற்ற கல்வி அவனின் இன்றைய உயர்நிலைக்கு காரணமாய் அமைந்தது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு விடாமுயற்சியின் அவசியத்தை வெளிப்படுத்தும் விதமான ஒரு **சிறுகதை**

(25 புள்ளிகள்)

3. பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 40-45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.

(சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

தமிழ்மொழி உலகளவில் தொன்மையும் சீரிளமையும் மிக்க உயர்தனிச் செம்மொழியாக விளங்குகின்றது. கங்குல் இருளைப் போக்கும் கதிரவனைப் போல, தமிழ் இலக்கியங்கள் தமிழர்களின் வரலாற்றுச் சான்றுகளாகவும் பண்பாட்டு அடையாளங்களாகவும் திகழ்கின்றன. சங்க நூல்கள் பண்டைத் தமிழரின் இயற்கையோடு இயைந்த அகம் மற்றும் புறம் சார்ந்த வாழ்வியலை மிக அழகாகச் சித்திரிக்கின்றன.

வான் தொடும் புகழ்கொண்ட திருக்குறள், நாலடியார், ஆசாரக்கோவை போன்ற அறநூல்கள், சாதி சமயங்களைக் கடந்து மனித சமூகம் முழுமைக்கும் தேவையான பொது அறக் கருத்துக்களை வழங்கி நிற்கின்றன. மேலும், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, மற்றும் குண்டலகேசி போன்ற காப்பியங்கள் தமிழரின் நீதி நெறியையும் பண்பாட்டுச் செறிவையும் உலகுக்கு உணர்த்துகின்றன. அவ்வாறே, கல்லணை மற்றும் பெருவுடையார் கோவில் போன்ற வரலாற்றுச் சின்னங்கள், தமிழர்களின் ஒப்பற்ற பொறியியல் மற்றும் கட்டிடக்கலைத் திறனை வெளிப்படுத்துகின்றன. பண்டைய காலத்து மன்னர்களும் புலவர்களும் தமிழைத் தம் உயிர்போலக் காத்துப் போற்றினர்.

எனவே, தற்கால மாணவர்கள் தமிழ் இலக்கியங்களையும் வரலாற்றுச் சிறப்புகளையும் வெறும் பரீட்சைக்காக மட்டுமன்றி ஆழமாகக் கற்று உணர்வதுடன், அம்மொழிச் செல்வங்களைப் பேணிப் பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்குப் பெருமையுடன் கொண்டு சேர்ப்பதைத் தங்களின் முதன்மையான கடமையாகக் கொள்ளவேண்டும்.

(10 புள்ளிகள்)

4. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

மனித வாழ்க்கையில் நேரம் மிகவும் பெறுமதியான ஒன்றாகும். இழந்த செல்வத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள முடியும். இழந்த உடல்நலத்தையும் சிலவேளைகளில் மீட்டுக்கொள்ள முடியும். ஆனால், கடந்துபோன நேரத்தை எவ்வளவு முயன்றாலும் மீண்டும் கொண்டுவர முடியாது. இதனை உணர்ந்தவர்கள் தமது ஒவ்வொரு நாளையும் பயனுள்ள வகையில் அமைத்துக்கொள்கின்றனர். நேரத்தை மதிப்பவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பதற்கான வாய்ப்புகளை அதிகம் பெற்றுக்கொள்கின்றனர். இன்றைய மாணவர்கள் கல்வி, விளையாட்டு, பொழுதுபோக்கு எனப் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இவற்றில் எதுவும் தவறானதல்ல. ஆனால், ஒவ்வொரு செயலுக்கும் உரிய நேரத்தை ஒதுக்குவது அவசியமாகும். கைப்பேசியில் அளவுக்கு அதிகமாக நேரத்தைச் செலவிடுவதும் தேவையற்ற உரையாடல்களில் ஈடுபடுவதும் மாணவர்களின் கல்விப் பயணத்தைப் பாதிக்கக்கூடும். நாளை செய்யலாம் என்று இன்றைய கடமைகளைத் தள்ளிப்போடும் பழக்கம் வளர்ந்தால், செய்ய வேண்டிய பணிகள் குவிந்து மன அழுத்தத்தை ஏற்படுத்தும்.

நேரத்தைச் சிறப்பாகப் பயன்படுத்துவதற்கு முன்கூட்டியே திட்டமிடுதல் உதவுகின்றது. அன்றைய தினம் செய்ய வேண்டிய பணிகளைப் பட்டியலிட்டு, அவற்றின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப ஒழுங்குபடுத்த வேண்டும். கடினமான பணிகளைச் செய்வதற்குத் தேவையான நேரத்தை ஒதுக்கி, இடையிடையே ஓய்வெடுப்பதும் நல்ல பழக்கமாகும். இவ்வாறு திட்டமிட்டுச் செயல்படும்போது பணிகள் எளிதாக நிறைவேறுவதுடன், தன்னம்பிக்கையும் அதிகரிக்கின்றது. நேரத்தைப் பயன்படுத்துவதில் வெற்றி பெறுவது என்பது எப்போதும் வேலை செய்துகொண்டிருப்பதைக் குறிக்காது. உடலுக்கும் மனதுக்கும் ஓய்வு வழங்குவதும் குடும்பத்தினருடன் நேரத்தைச் செலவிடுவதும் சமூகப் பணிகளில் ஈடுபடுவதும் வாழ்க்கையின் முக்கியமான பகுதிகளாகும். எனவே, நேரத்தை வீணாக்காமல், அதனைச் சரியான முறையில் பகிர்ந்துகொண்டு வாழ்வதே உண்மையான நேர முகாமைத்துவமாகும். இத்திறனை இளமையிலேயே வளர்த்துக்கொள்ளும் மாணவர்கள் எதிர்காலத்தில் பொறுப்புள்ளவர்களாகவும் திறமையானவர்களாகவும் உருவாக முடியும்.

(i) மனித வாழ்க்கையில் நேரம் பெறுமதியானது எனக் கூறப்படுவதற்கான காரணம் யாது?

(ii) மாணவர்களின் கல்விப் பயணத்தைப் பாதிக்கக்கூடிய இரண்டு பழக்கங்களைக் குறிப்பிடுக.

(iii) பணிகளைத் திட்டமிட்டுச் செய்வதால் கிடைக்கும் இரண்டு நன்மைகள் யாவை?

(iv) வாழ்க்கையின் முக்கியமான பகுதிகளாகக் குறிப்பிடப்பட்டவற்றுள் இரண்டினை எழுதுக.

(v) உண்மையான நேர முகாமைத்துவம் என இங்கு குறிப்பிடப்படுவது யாது?

(2x5=10 புள்ளிகள்)

5. தற்காலத்தில் இளைஞர்கள் மத்தியில் புகைத்தல் மற்றும் போதைப்பொருட்களின் பயன்பாடு அதிகரித்து வருவதன் காரணமாக அவர்களின் எதிர்கால வாழ்க்கையும் சுகாதாரமும் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றன. இத்தீய பழக்கவழக்கங்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்கவும், இவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்குமாறு கோரி, அறவெளி கிராமிய இளைஞர் மன்றத்தின் செயலாளரான செ.கஜானன் என உம்மைக் கருதிக்கொண்டு, பிரதேச சுகாதார அதிகாரிக்கு 100 சொற்களில் **கடிதம்** ஒன்று எழுதுக.

அல்லது

பிளாஸ்டிக் கழிவுகளை உரிய முறையில் முகாமைத்துவம் செய்யாமையினால் சூழல் அதிகளவில் மாசுபடுகின்றது. அதனைத் தடுத்து, சுற்றாடலைப் பேணிப் பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு மன்றம்' சார்பாகப் பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்காகத் தயாரிக்கப்படும் **துண்டுப்பிரசுரம்** ஒன்றினை 100 சொற்களில் தயாரிக்க.

(15 புள்ளிகள்)

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

22 T III

අධ්‍යාපන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) උපකාරක තක්සෙරුව, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) உதவி மதிப்பீடு, 2026
General Certificate of Education (Ord. Level) Supportive Assessment, 2026

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය	III
தமிழ்மொழியும் இலக்கியமும்	III
Tamil Language Literature	III

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

தமிழ்மொழியும் இலக்கியமும் III

அறிவுறுத்தல்கள் :

- அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

1. சுருக்கமான விடை தருக.

(i) "அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா..."
(அ) அடக்கமுடையோர் என யாரைக் குறிப்பிடப்படுகின்றது?
(ஆ) கடக்க என்பதன் பொருள் யாது?

(ii) "மாத மூன்றும் மழையுள்ள நாடு
வருஷ மூன்றும் விளைவுள்ள நாடு..."
(அ) இங்கு குறிப்பிடப்படும் நாடு எது?
(ஆ) இங்கு நாட்டுவளம் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது?

(iii) "சினிமா மொழியின் கால்புள்ளி, முற்றுப்புள்ளி, பத்தி என இவற்றைச் சொல்லலாம்..".
(அ) இத்தொடர் இடம்பெறும் கட்டுரையின் ஆசிரியர் யார்?
(ஆ) இங்கு கால்புள்ளி என்பது எதனைக் குறிக்கின்றது?

(iv) "நாடு இறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவும் நலமாயிற்றே..."
(அ) இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
(ஆ) இங்கு நலமாயிற்றே எனக் கூறக் காரணம் யாது?

(v) "கான் ஆள உனை விடுத்த கண்இலா
அருளிலிதன் காதல் மைந்தன்.." இதில்
(அ) கான் ஆளச்சென்றவர்கள் யாவர்?
(ஆ) கண்இலா அருளிலி யார்?

(vi) "இந்த நாய்க்கு உரிமையில்லாத முத்தியுலகம் எனக்கு வேண்டாமென மறுத்துக் கூறுகின்றார்".
(அ) இது யாருடைய கூற்றாக இடம்பெற்றுள்ளது?
(ஆ) இப்பாத்திரம் இடம்பெறும் இலக்கியம் எது?

(vii) "கூட்டிற் பசுங்கிளிப்போற் கோதையரை எப்பொழுதும்
வீட்டில் அடைத்து வைக்கும் விரகிலருக்கு யாது உரைப்போம்.."
(அ) இங்கு கூறப்படும் ஆணாதிக்க செயற்பாடு யாது?
(ஆ) இங்கு கையாளப்பட்டுள்ள அணியைக் குறிப்பிடுக.

PAST PAPERS WIKI

(viii) "செழித்தோங்கி வளர்ந்திருக்கும் செந்நெல் வயல் நிலமும்
செவ்வாம்பல் மலருடுத்த சிற்றமுதக் குளமும்..."
(அ) இங்கு குறிப்பிடப்படும் நிலம் எது?
(ஆ) குளத்தின் அழகு எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றது?

(ix) "அழகான நடை வண்டி அசைந்தாடும் கிலுகிலுப்பை
பழக ஒரு மரப்பாச்சி பாவையரே யார் பறிச்சா.."
(அ) இங்கு குறிப்பிடப்படும் விளையாட்டுப் பொருட்கள் எவை?
(ஆ) இத்தொடரினூடாக யாருடைய துயரம் வெளிப்படுத்தப்படுகின்றது?

(x) "நான் மனிதன், மனிதனுக்கு இயல்பான எதனையும் நான் வெறுப்பதில்லை"
(அ) இக்கூற்றைக் கூறியவர் யார்?
(ஆ) இக்கூற்றில் வெளிப்படும் கொள்கை யாது?

(2x10 = 20 புள்ளிகள்)

2. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப்பகுதிகளையும் வாசித்து, அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(i) மூத்தோன் மற்று இவை உரைப்ப இளையோன்
வெஞ்சினம் மனத்திலே மூளமூள
நாத்தோம் இல் உரை பதறக் கதுமென உற்று
எழுந்து இறைஞ்சி ஞாலம் எல்லாம்
பூத்தோனே பூந்தவிசில் பூவை புணர்
மணிமார்பா புன்மை யாவும்
தீர்த்தோனே ஊனம் இலான் மானம் இலாது
உரைப்பதற்கு என் செய்வது என்றான்.

(அ) வீமனுடைய கோபத்தின் வெளிப்பாடு எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது?
(ஆ) கிருஷ்ணனின் புகழ் சிறப்பிக்கப்படுமாற்றினை விளக்குக.

(ii) தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்துஇன் புறாஅர் ஆயினும் கையின்
ஈர்த்துஇன் புறூஉம் இளையோர் போல்
உற்றுஇன் புறேஎம் ஆயினும் நற்றேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்துஇன் புற்றனெம் செறிந்தன வளையே

(அ) தலைவியின் கைவளையல்கள் கழன்று விழாமைக்கு தோழி கூறும் காரணம் யாது?
(ஆ) இங்கு கையாளப்பட்ட அணியினைக் குறிப்பிட்டு விளக்குக.

(iii) புலங்க ளோடு கரணமும் ஆவியும்
போந்து நின்ற விருப்புடன் மானிடன்
நலங்க ளேது விரும்புவன் அங்கவை
நண்ணு றப்பெறல் திண்ணம் தாமென,
இலங்கு நூலுணர் ஞானியர் கூறுவர்
யானும் மற்றது மெய்யெனத் தேர் ந்துளேன்
விலங்கி யற்கை யிலையெனில் யாமெலாம்
விரும்பு மட்டினில் விண்ணுற லாகுமே

(அ) மனிதன் தான் விரும்பிய நலன்களை எவ்வாறு அடையலாம் எனக் கூறப்படுகின்றது?
(ஆ) 'இலங்கு நூலுணர் ஞானியர்' எனும் வரியின் பொருளைத் தருக.

(iv) "அப்ப ஏன்கா நம்மட உம்மா மவுத்தாப் போன அன்டெக்கி இது கத்தல்ல. கத்திருந்தா நம்மட உம்மாவ வூட்டுக்க ஒளிச்சி வச்சிருக்கலாம் என்னகா?". மூத்தம்மா என்னை இறுக அணைத்துக்கொண்டா. தங்கச்சி அவ மடிக்குள் விழுந்து தூங்கிக்கொண்டிருந்தாள். வாப்பா புதிதாய் ஒரு உம்மாவை கொண்டு வந்தார். மூத்தம்மாவை விட்டுப் பிசக விருப்பம் இல்லை என்பதால் எங்களை இவ்விடமே விட்டுவிட்டார்.

(அ) இங்கு வெளிப்படும் காசிமின் ஏக்கம் யாது?
(ஆ) மூத்தம்மாவிற்கும் - பேரப்பிள்ளைகளுக்குமிடையிலான பாசப்பிணைப்பு வெளிப்படும் தொடரை எடுத்துக்காட்டுக.

(v) இந்த இருவரும் இலங்கைச் சட்டசபையில் இலங்கைப் பிரதிநிதித்துவத்திற்குப் போட்டியிட்டுக்கொண்டிருக்கின்றார்கள். சர்வசன வாக்குரிமையைப் பற்றி அந்தக் காலத்திற் பேசுவதுங்கிடையாது. உரிமை உள்ளவர்களும் குறித்த ஓரிடத்துக்குப் போய்த் தமது வாக்கை இன்னாருக்கென்று வழங்குவதும் இல்லை. கல்விமான்கள், பிரபுக்கள் கூட்டங்கூடித் தங்கள் அபிப்பிராயத்தை அரசாங்கத்தார்க்கு தெரிவிப்பது வழக்கம். இந்த இருவரில் தக்கவர் இன்னாரென்று வாதிப்பதற்குத்தான் அந்தப் பாரிய கூட்டம்.

(அ) பாரிய கூட்டம் நடைபெற்றமைக்கான காரணம் யாது?
(ஆ) இலங்கை சட்டசபைக்கான தெரிவு இடம்பெற்ற விதத்தினை எடுத்துக்காட்டுக.

(4x5 = 20 புள்ளிகள்)

3. **குகப்படலத்தில்,**

(அ) தாய்மாரின் மாட்சிமை

(ஆ) குகன் பற்றிய சித்திரிப்பு

ஆகியன வெளிப்படுமாற்றினை விளக்குக.

அல்லது

தத்தைவிடு தூதினை ஆதாரமாகக் கொண்டு,

(அ) காதலி பற்றிய விபரிப்பு

(ஆ) அக்காலத்து பெற்றோரால் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள்

ஆகியன வெளிப்படுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

4. **கம்பியூட்டர்** சிறுகதையை ஆதாரமாகக் கொண்டு,

(அ) கதையோட்டத்தில் நண்பர் பெறும் முக்கியத்துவம்

(ஆ) கதை வளர்ச்சியில் பயன்படும் உவமைத்தொடர்களின் பொருத்தப்பாடு

என்பன வெளிப்படுமாற்றினை விளக்குக.

அல்லது

இலட்சியமும் சமநோக்கும் கட்டுரையில்,

(அ) இலட்சியத்தின் முக்கியத்துவம்

(ஆ) சத்தியத்தை இலட்சியமாகக் கொண்டவர்களின் இலட்சியச் சிறப்பு

என்பன புலப்படுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

- 5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து விடை எழுதுக.

5. நாட்டார் பாடல் பகுதியில்,

(அ) காதல் பாடலில் காதலனின் அறவுணர்வு

(ஆ) உழவர்கள் தம்பிரானிடம் வேண்டுவன

ஆகியன கூறப்பட்டுள்ளவாற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

6. அற்றைத் திங்கள் நாடகத்தில்,

(அ) போரின் விளைவுகள்

(ஆ) இந்நாடகத்தில் கபிலர் பெறும் முக்கியத்துவம்

என்பன பற்றி விளக்குக.

(10 புள்ளிகள்)

7. தமிழ்ப் பண்பாடு கட்டுரையில்,

(அ) தமிழ்ப் பண்பாட்டின் குறிக்கோள்கள்

(ஆ) விபுலானந்தரின் பக்தி

என்பவற்றை எடுத்துரைக்குக.

(10 புள்ளிகள்)

***

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

අධ්‍යාපන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) උපකාරක තක්සේරුව, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) உதவி மதிப்பீடு, 2026
General Certificate of Education (Ord. Level) Supportive Assessment, 2026

දෙමළ භාෂාව හා සාහිත්‍යය	I, II
தமிழ்மொழியும் இலக்கியமும்	I, II
Tamil Language Literature	I, II

புள்ளித் திட்டம்

பகுதி I

1)	2	11)	2	21)	4	31)	3
2)	3	12)	1	22)	1	32)	4
3)	4	13)	3	23)	3	33)	2
4)	1	14)	4	24)	1	34)	4
5)	4	15)	3	25)	2	35)	2
6)	4	16)	4	26)	4	36)	1
7)	2	17)	2	27)	2	37)	4
8)	3	18)	3	28)	1	38)	1
9)	2	19)	2	29)	3	39)	3
10)	1	20)	1	30)	4	40)	2

(40x1=40 புள்ளிகள்)

பகுதி II

1.

(i) புலன் அழிந்து ஒரு புத்துயிர் எய்துவேன்

(ii) எழுவாய் - தோணி
பயனிலை- வந்தது.

(iii) நமது அம்மாவை வீட்டிற்குள் ஒளித்து வைத்திருக்கலாம்

(iv) "என்னடா அப்படிப் பார்க்கிறாய்?" என்றாள்.

(v) எட்டயபுரத்தில் பிறந்த பாரதியார் குழந்தைப் பாடல்களைப் பாடினார். அல்லது
குழந்தைப் பாடல்களைப் பாடிய பாரதியார் எட்டயபுரத்தில் பிறந்தார்

(vi) பார் - உலகம் (பெயர்)
பார் - பார்த்தான் (வினை)

(vii) கைந்நூல், நாகரிகம்

(viii) புனைகதை - வினைத்தொகை.
இராப்பகல் - உம்மைத்தொகை

(ix) முத்தமிழ்

(x) எண் வழு - அனைத்து அலுவலகங்களுக்கும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

(10x2=20 புள்ளிகள்)

2.

(i) **தலைப்பு**

- வீதி விபத்துக்கான காரணங்களும் அவற்றைத் தடுக்கும் வழிமுறைகளும்
- வீதிவிபத்துகளும் தீர்வுகளும்

விபத்துக்களுக்கான காரணங்கள்.

- சாரதிகள் சார்ந்த காரணங்கள்
- பாதசாரிகளின் மற்றும் பயணிகளின் தவறுகள்
- வீதிகள் சார்ந்த காரணிகள் மற்றும் வாகனத் தொழல்நுட்பக் கோளாறுகள்.

விபத்துக்களினால் ஏற்படும் தாக்கங்கள்

- உயிர் மற்றும் உடல் இழப்புகள்
- வாகனங்கள், உடமைகள் சேதம், இழப்பு
- நிரந்தர அவயவ இழப்பு, குடும்ப மகிழ்ச்சி குலைதல்
- பொருளாதாரப் பாதிப்பு.

வீதி விபத்துக்களை. தடுக்கும் வழிமுறைகள்

- சட்டங்களைக் கடுமையாக்குதல்
- வீதி விதிமுறைகளைக் கடைப்பிடித்தல்
- விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேம்படுத்தல்
- உட்கட்டமைப்பு மேம்பாடு
- வீதிச் சமிக்ஞைகள், குறியீடுகளை உரிய முறையில் அமைத்தல்

(ii) **தலைப்பு**.

மனித வாழ்வும் தொழில்நுட்பமும்
தொழில்நுட்ப முன்னேற்றமும் மனித வாழ்வும்

மனிதன் கருவான நாள் முதல் இறக்கும் வரை ஒவ்வொரு நிலைகளுடனும்
தொழில்நுட்பத்தை இணைத்து எழுதுதல்

தொழில்நுட்பத்தின் நன்மைகள்

-கல்வி மற்றும் கற்பித்தல் முறைகளில் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான மாற்றங்கள்.
-மருத்துவத்துறையில் நவீன உபகரணங்களின் வருகை மற்றும் உயிர்காக்கும் தொழில்நுட்பங்கள்
-தொடர்பாடல் மற்றும் போக்குவரத்துத் துறைகளின் வளர்ச்சி
-வேலைகளை இலகுவாக்கல், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு
-புத்தாக்கச் செயற்பாடுகள்

தொழில்நுட்பத்தின் தீமைகள்

-இணையம் மற்றும் சமூக வலைத்தளங்களின் அதீத பயன்பட்டால் இளைய தலைமுறை நேரத்தை வீணடித்தல்
-தனிநபர் அந்தரங்கம் பறிபோதல் மற்றும் சைபர் குற்றங்கள் அதிகரித்தல்
-இயந்திரமயமாக்கலால் மனிதர்களின் வேலைவாய்ப்புகள் பாதிக்கப்படுதல் மற்றும் உடல், உள நலக் கோளாறுகள்
-தொழில்நுட்பம் என்பது கருவிகளை மட்டுமே வழங்கும் அதனை எவ்விதம் பயன்படுத்துவது என்பது மனிதனின் கைகளில் தான் தங்கி உள்ளது என்பதை ஒப்புக்கொள்ளுதல்.

(iii) **தலைப்பு** – மேடைப்பேச்சு

- குடும்ப வன்முறைகளும் பிள்ளைகளும்
- குடும்ப வன்முறையைத் தவிர்ப்போம்
- வன்முறையற்ற குடும்பம்

பேச்சுக்கான விளிப்பு

குடும்ப வன்முறைகளுக்கான காரணங்கள்.

-பொருளாதார நெருக்கடி.
-போதைக்கு அடிமையாதல்
-முறையற்ற சமூக ஊடகப் பயன்பாடு

பிள்ளைகளின் மனநலம் மற்றும் கல்வியில் ஏற்படும் தாக்கங்கள்.

மனநலப் பாதிப்புகள்
கல்வியில் பாதிப்பு
எதிர்காலம் கேள்விக்குறியாதல்
போசாக்கின்மை
துஷ்பிரயோகங்களுக்குள்ளாதல்

மீளெழுவது தொடர்பானது

பெற்றோர் மற்றும் சமூக விழிப்புணர்வு
ஆலோசனைச் சேவைகள்
சட்டப் பாதுகாப்பும் அமைப்புகளும்
பேச்சுக்கான முடிப்பு

(iv) தலைப்பு

விடாமுயற்சி
கல்வியே வாழ்வின் ஒளி

வறுமையும் சவால்களும்.

-வீட்டில் கல்வி கற்பதற்கான வசதிகள் இல்லாமை
-பொருளாதாரச் சிக்கல்கள் - கல்விக்கான செலவுகளை ஈடுசெய்ய முடியாமை, உணவு, உடை போன்ற அத்தியாவசிய தேவைகள் பற்றாக்குறை

விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும்.

-இரவும் பகலும் அயராது கல்வி கற்பதில் காட்டிய உறுதியும் கவனமும்.
-அவனது நீண்ட கால உழைப்பிற்குரிய பலன் கைகூடுதல்

பொருளமைவும் அளவும்	- 12 புள்ளிகள்
கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும்	- 06 புள்ளிகள்
எழுத்து நுட்பங்கள்	- 05 புள்ளிகள்
தலையங்கம்	- 02 புள்ளிகள்
மொத்தம்	**- 25 புள்ளிகள்**

3. சுருக்கம்

1. தமிழ் இலக்கியங்கள் தமிழர்களின் வரலாற்றையும் பண்பாட்டையும் வெளிப்படுத்துகின்றன.

2. சங்க நூல்கள் பண்டைய வாழ்வியலையும் அறநூல்கள் உலகப் பொது அறங்களையும் உணர்த்துகின்றன.

3. காப்பியங்கள் நீதி நெறியையும், வரலாற்றுச் சின்னங்கள் தமிழரின் கட்டிடக்கலை அறிவையும் புலப்படுத்துகின்றன.

4. முன்னோர்கள் தமிழ்மொழியைப் பெரிதும் காத்துப் போற்றினர்.

5. மாணவர்கள் தமிழ் இலக்கியச் செல்வங்களைக் கற்றுப் பாதுகாத்து எதிர்காலத் தலைமுறைக்கு அளித்தல் வேண்டும். (10 புள்ளிகள்)

4. கிரகித்தல்

(i) கடந்துபோன நேரத்தை எவ்வளவு முயன்றாலும் மீண்டும் கொண்டுவர முடியாததால் நேரம் பெறுமதியானதாகும்.

(ii) கைபேசியில் அளவுக்கு அதிகமாக நேரத்தைச் செலவிடுதல்.
தேவையற்ற உரையாடல்களில் ஈடுபடுதல்.

(iii) பணிகள் எளிதாக நிறைவேறும்.
தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

(iv) உடலுக்கும் மனதுக்கும் ஓய்வு வழங்குதல், குடும்பத்தினருடன் நேரத்தைச் செலவிடுதல், சமூகப்பணிகளில் ஈடுபடுதல்

(v) நேரத்தை வீணாக்காமல், அதனைச் சரியான முறையில் பகிர்ந்துகொண்டு வாழ்வதே உண்மையான நேர முகாமைத்துவமாகும்.

(2x5=10 புள்ளிகள்)

கடிதம்

அமைப்பு

முகவரி	-	01 புள்ளி
உள்முகவரி	-	01 புள்ளி
விளிப்பு	-	01 புள்ளி
தலைப்பு	-	01 புள்ளி
பதவி, ஒப்பம்	-	01 புள்ளி
		05 புள்ளிகள்
உள்ளடக்கம்	-	**07 புள்ளிகள்**
மொழிநடை	-	**03 புள்ளிகள்**
மொத்தம்	-	**15 புள்ளிகள்**

(தரப்பட்ட தரவுகளுக்கமைய முகவரி முதலானவை அமைதல் வேண்டும்.)

துண்டுப்பிரசுரம்

அமைப்பு -	கவர்ச்சிகரமான தலைப்பு	- 02
	விளிப்பு	- 01
	வெளியிடுபவர் பற்றிய விபரமும் திகதியும்	- 02
		- 05 புள்ளிகள்
உள்ளடக்கம்		**- 07 புள்ளிகள்**
மொழிநடை		**- 03 புள்ளிகள்**
மொத்தம்		**- 15 புள்ளிகள்**

(தரப்பட்ட தகவல்களுக்கு அமைய வெளியிடுபவர் விபரம் அமைதல் வேண்டும்)

தமிழ்மொழியும் இலக்கியமும் III

விடைகள்

1.

(i) (அ) அறிவுடையோர் / தக்க சமயம் வரும்வரை பொறுமையுடன் காத்திருப்போர்
(ஆ) வெல்வதற்கு

(ii) (அ) குற்றாலநாடு /திருக்குற்றால நாடு /ஆரியநாடு /தென்னாரிய நாடு
(ஆ) மாதம் மூன்று மழை, வருடம் மூன்று விளைச்சல் / மும்மாரி, முப்போகம்

(iii) (அ) சு.தியடோர் பாஸ்கரன்
(ஆ) கண்ணிமைப்பது போல காட்சி மாறுவது / கட் (cut)

(iv) (அ) கோசலையால், பரதனுக்கு
(ஆ) குகனது நட்பு கிடைத்தமை.

(v) (அ) பஞ்சபாண்டவர்கள் /தருமன், அருச்சுனன், வீமன், நகுலன், சகாதேவன்
(ஆ) திருதராட்டினன்

(vi) (அ) தருமன்
(ஆ) மகாபாரதம்

(vii) (அ) பெண்களை வீட்டிற்குள் அடைத்து வைத்தல்
(ஆ) உவமையணி

(viii) (அ) மருதநிலம்/வயல்நிலம்
(ஆ) செவ்வாம்பல் மலர்கள் நிறைந்திருப்பது/செவ்வாம்பல் மலர்களைக் குளம் உடுத்தியிருப்பது

(ix) (அ) நடைவண்டி, கிலுகிலுப்பை, மரப்பாச்சி
(ஆ) பாரி மகளிர்/ அங்கவை, சங்கவை

(x) (அ) ரெறன்ஸ் (Terence)
(ஆ) மக்கள் நலக்கொள்கை (10x2=20 புள்ளிகள்)

2.

(i) (அ)

- கொடிய கோபமானது வளர நாவிலிருந்து எழும் குற்றமற்ற வார்த்தைகள் குளறல்.
- விரைவாக எழுதல், தருமனை மானமிலான் என இழித்துரைத்தல்

(ஆ)

- உலகம் முழுவதையும் கொப்பூழினின்றும் தோற்றுவித்தவன்.
- செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் அமர்ந்திருக்கப்பெறும் கௌத்துப மணியை அணிந்த மார்பினையுடையவன்.
- அடியார் குறைகளை நீக்கியவன்

(ii) (அ) தலைவன் இல்லாத போதும் அவன் நினைவுகளை மனதால் நினைத்து இன்பம் அடைதல். அதனால் உடல் மெலிவடையவில்லை.

(ஆ)

உவமானம் :- சிறுவர்கள் விளையாட்டு தேரில் ஏறி உலாவர முடியாத போதிலும் அதனை இழுத்து உருளச்செய்து இன்பமடைதல்.

உவமேயம் :- தலைவனோடு சேர்ந்து இன்பம் காண முடியாத நிலையில் பிரிந்திருந்தாலும் மனதால் அவன் பற்றி நினைத்து தலைவி இன்பமைடதல்

பொதுத்தன்மை :- எய்தக் கூடிய முழுப்பயனை எய்த முடியாதவிடத்தும் ஏதோ வழியில் திருப்தி காணுதல்

(iii) (அ) ஐம்புலன்களோடு, அந்தகரணங்களும் உயிரும் ஒருங்குசேர்ந்து நின்ற விருப்புடன் மானிடன் நன்மைகளை விரும்புதல்.

(ஆ) விளங்குகின்ற நூல்களைக் கற்றுணர்ந்த சான்றோர்

(iv) (அ)

- தாயில்லை என்ற ஏக்கம்
- தாயைக் காப்பாற்ற முடியவில்லை என்ற ஏக்கம்.

(ஆ) மூத்தம்மாவை விட்டுப் பிசக விருப்பம் இல்லை

(v) (அ) இலங்கைச் சட்டசபையில் இலங்கைப் பிரதிநிதித்துவத்திற்கு பொருத்தமானஒருவரை தெரிவுசெய்தல்.

(ஆ) கல்விமான்கள், பிரபுக்கள் கூட்டங்கூடித் தங்கள் அபிப்பிராயத்தை அரசாங்கத்துக்குத் தெரிவிப்பதன் மூலம்

(4x5 = 20 புள்ளிகள்)

3. குகப்படலம்,

(அ) கோசலை

- ❖ உறவினரும் தேவர்களும் வணங்கும்படியான தோற்றத்தை உடையவள்.
- ❖ அரசர்கள் திறை செலுத்துவதற்காக குழுமியிருக்கும் முற்றத்தையுடைய தசரதனின் முதல் மனைவி
- ❖ மூன்று உலகைப் படைத்த பிரம்மனைப் படைத்த திருமாலின் அவதாரமான இராமனைப் பெற்றவள்.
- ❖ அடைய வேண்டிய அரசு செல்வத்தை பரதன் காரணமாக துறந்த பெரியாள்.

சுமித்திரை

- ❖ தர்மமே வடிவானவள்
- ❖ அன்பினால் நிறைந்தவள்
- ❖ நீதி தவறாத தசரதச் சக்கரவர்த்தியின் இளைய மனைவி.
- ❖ இராமனை விட்டுப்பிரியாத இலக்குமணனைப் பெற்றெடுத்தவள்.

(08 புள்ளிகள்)

(ஆ)

- ❖ மூத்தோரையும் பெரியோரையும் வணங்கும் இயல்புடையவன்.
- ❖ கோசலையைத் தொழுது வணங்கியவன்

- ❖ கோசலை துயரைத் தாங்காது வருந்தியவன்
- ❖ இராமனுக்கு இனிய உயிர் நண்பன்
- ❖ இலக்குமணனுக்கும் சத்துருக்கனுக்கும் பரதனுக்கும் அண்ணன்
- ❖ மலையை ஒத்த திரண்ட தோள்களையுடையவன்
- ❖ ஆண் யானை போன்ற வலிமையுடையவன்
- ❖ ஆடவரில் சிறந்தவன்
- ❖ தனது புதல்வர்களுக்குச் சமமாக கோசலையால் மதிக்கப்பட்டவன்
- ❖ இரக்கமில்லாத கைகேயியையும் தாயைப்போல கருதி வணங்கியவன். (07 புள்ளிகள்)

அல்லது.

(அ)

- மான் ஏங்கி நிற்கும் மை பூசப்பட்ட கண்களையுடையவள்
- வஞ்சிக்கொடி போன்றவள்
- பசுமையான வளையல்களை அணிந்தவள்
- செந்தாமரை மலர்போல ஒளிபொருந்திய முகம்
- தேடுவதற்கரிய நல்ல இரத்தினம் போன்றவள்.
- அன்னம் போன்ற நடையுடையவள்
- மை தீட்டப்பட்ட விழியுடையவள்
- பூக்கொம்பு போன்ற உடலழகுடையவள்
- இலக்குமி போன்றவள்
- பெண்களுக்கு அரசி
- கரும்பு போன்ற இனிமையான மொழி பேசுபவள்
- தாமரை போன்ற முகத்தையுடையவள். (08 புள்ளிகள்)

(ஆ)

- மூடருக்கும் பேதையருக்கும் மெலியோர், முதியோர் போன்றோருக்கும் திருமணம் செய்து கொடுத்தல்.
- பெண்ணின் அருமை அறியாதவர்களுக்கு பெண்ணைத் திருமணம் செய்துகொடுத்தல்.
- பூவுலகில் வாழும் காலம் வரை வருந்துவதற்கு பெற்றெடுத்தார்.
- புலிவாயில் அகப்பட்ட மான்போல பொருத்தமற்றவர்களுக்குப் பெண்ணைக் கொடுத்தல்.
- பொன்னையும் கொடுத்து துன்பத்தையும் தேடுதல்.
- வீட்டில் அடைத்து வைத்து வெளியுலகம் தெரியாமல் வளர்த்தல்
- கண்ணைக்கட்டி காட்டில் விடும் பூனையைப்போல் திருமணம் செய்துகொடுத்தல்.
- திருமண விடயத்தில் இமைப்பொழுதில் தீர்மானமெடுத்தல்
- ஆண் என்ற தகுதியை மட்டும் பார்த்தல் (07 புள்ளிகள்)

4. கம்பியூட்டர்

(அ)

- கதைசொல்லியால் கம்பியூட்டரைத் தனித்து வாங்க முடியாமல் நண்பரோடு படையெடுத்தமை
- கம்பியூட்டரைக் கொத்துக் கொத்தாக ஆராய்ந்து வித்துவான் பட்டம் பெற்றவர்.
- நண்பர் கடைக்காரனைக் குடைந்த விதம்
- கம்பியூட்டரைப் பாவிக்கும் முறை பற்றி ஆலோசனை வழங்கியமை
- கம்யியூட்டரின் வீரப்பிரதாபங்களைப் பற்றி பரணி பாடியமை
- தொலை எனும் கதை தொலைந்தபோது நண்பரைத்தேடிச் சென்றமை
- சிறுகதையைத் தேடி தர முயற்சித்தமை.

(07 புள்ளிகள்)

(ஆ)

- பொங்கல் பானையை இறக்குவதுபோல கம்பியூட்டரைக் கவனமாக இறக்குதல்
- புதிதாய்ப் பிறந்த குழந்தை வீட்டை அடியோடு மாற்றுவதுபோல கம்பியூட்டர் வருகையால் ஏற்பட்ட மாற்றம்.

- புகையிலைக் கன்றுக்கு பாத்திகட்டுவது போலத் தனித்தனி விபரப்புத்தகங்களை (டைரக்டரி) கையாண்டு பாவித்தமை
- பக்குவமாய்ப் பணியாரம் செய்து பனைநார் பெட்டியில் மூடி மாடாவில் மறைத்து வைத்ததுபோல - மிகவும் கவனமாக பேணுதல்.
- நீத்துப் பூசணிக்காய்போல - நிறைந்திருத்தல்
- குவளை மலர் போன்ற கருநீலக்கண்களை இன்னும் அகல விரித்து ஆச்சரியமாக பார்த்தல்.
- கள்ளுப்பொங்குவதுபோல – கதை எழுத உணர்ச்சி பெருகுதல்.

(பொருத்தப்பாடுகளையும் எழுதுதல்) (08 புள்ளிகள்)

அல்லது

இலட்சியமும் சமநோக்கும்

(அ)

- உலகம் இனிது நடைபெறவும் மக்கள் உயர் நலமுறவும் இலட்சியங்கள் கருவியாகின்றன.
- இலட்சியம் இன்றேல் உலகம் இனிமை தராது
- இலட்சியம் சமூகமாகிய உடலுக்கு உயிர்
- இலட்சியமில்லாத மனிதன் மனிதனல்ல. இலட்சியமில்லாத வாழ்வு வாழ்வன்று.
- இலட்சியத்துக்காக உயிர் வாழ வேண்டும்.
- உயிர் வாழ்வதற்கு இலட்சியத்தை கைவிடுதல் கூடாது.
- இலட்சியம் ஒருவர் உண்ணும் உணவிலும் பருகும் நீரிலும் உயிரினும் இனியது.
- இலட்சியம் கொண்ட மனிதன் தாமும் ஈடேறிப் பிறரையும் ஈடேற்றுவான்.
- ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இலட்சியமேனும் இயைதல் வேண்டும்.
- இலட்சியம் இல்லாதது இலக்கியம் என வாதிப்பது மரபன்று. (07 புள்ளிகள்)

(ஆ) அரிச்சந்திரன்

- நாட்டை இழந்து, மகனை இழந்து, சேர்த்த செல்வத்தை இழந்து, ஒரு மனிதன் இழக்கக்கூடாது எனக் கருதுகின்ற புண்ணியப்பயனை (கதியை) இழந்தாலும் சத்தியத்தை இழக்கமாட்டேன் எனக் கூறுதல்.

மகாத்மாகாந்தி

- கலியுக அரிச்சந்திரன் என போற்றப்படுபவர்
- இந்தியாவும் பெரியதன்று உலகமும் பெரியதன்று உயிரும் பெரியதன்று சத்தியமே பெரியதாயிற்று என வாழ்ந்தவர்.

தசரதன்

- இரு இலட்சியங்களுக்கிடையே ஊசலாடுகின்றான். அரசியல் நிலைமாறும் தன்மை வாய்ந்தது. சத்தியம் நிலை மாறாதது எனக் கருதிச் சத்தியத்திற்காக உயிரைத் துறக்கின்றான்.

(08 புள்ளிகள்)

5. நாட்டார்பாடல்

(அ) காதலி பாதுகாப்பாகப் போய்ச் சேரவேண்டும் என வேண்டுதல்
கைவிடுவேன் என்று எண்ணிக் கவலைப்படவேண்டாம் எனக் கூறல்
அல்லாமேல் ஆணை உனை அடையாட்டிக் காட்டுப்பள்ளி எனக் கூறல்
ஓதிப்படிச்சி ஊர் புகழ வாழ்ந்தாலும் ஏழைக்குச் செய்த தீங்கை இறைவன் ஏற்கமாட்டான் எனக் கூறல். (05 புள்ளிகள்)

(ஆ)

தம்பிரான்

- பட்டி பெருக வேண்டும்
- பாற்பானை பொங்கவேண்டும்
- உழவுத்தொழில் சிறப்படைய வேண்டும்
- நாடு வளர்ச்சியடைதல் வேண்டும்
- பயிர்ச் செய்கைக்கு ஏற்ற மழை பெய்ய வேண்டும்
- எல்லோரும் வாழவேண்டும். (05 புள்ளிகள்)

Past Papers Wiki

6. அற்றைத்திங்கள்

(அ)

- அங்கவை, சங்கவை மகிழ்ச்சியையும் இழத்தல்.
- தந்தையை இழந்தமை, தந்தையின் தேரை இழந்தமை
- உறவுகளை இழந்தமை, உடமைகளை இழத்தல்
- தொட்டில் வரை இரத்த வெள்ளம்
- பால் வார்த்த நிலா முகம் பற்றிவிட்ட தீப்பந்தம்
- ஏலம்பூ வாய் பொசுங்க எரியுது தீக்கொழுந்து
- பாரி மகளிர் நிர்க்கதியாக்கப்பட்டமை
- சொந்த மண்ணை விட்டுப் பெயர்தல்
- மக்கள் கையறு நிலையில் செய்வதறியாது நிற்றல் (05 புள்ளிகள்)

(ஆ)

- பாரியின் நெருங்கிய நண்பன்
- குறிஞ்சிப் பாடலைப் பாடியவர்
- பாரியின் நட்பையும் விருந்தளித்தலையும் எண்ணி வருந்தியவர்.
- பாரி இல்லாதபோது பாரி மகளிருக்குத் தந்தை போன்று உறுதுணையாக நின்றவர்
- மலையைப் பிரிவதனால் கவலையடைபவர்

(05 புள்ளிகள்)

7.

(அ)

- உலக மனப்பான்மை
- விருந்தோம்பல்
- பிறர்மீது அன்பு
- ஈகை
- தமக்கென வாழா பிறருக்குரியவனாதல்
- என் கடன் பணி செய்து கிடப்பதே
- அகத்திணை, புறத்திணை மரபு
- மானம் என்றால் உயிரையும் கொடுத்தல்
- மனத்தூய்மை
- விடாமுயற்சி
- யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமே எனும் நிகரற்ற மனநிலை
- உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல். (ஏதாவது ஐந்து) (05 புள்ளிகள்)

(ஆ) வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல எனவும் இறைவன் விரும்புவது உள்ளமாகிய தாமரையே எனவும் கூறுதல்.

(05 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank